www.Padasalai.Net www.Trb Tnpsc.Com
www.surabooks.com

# 12ஆம் வகுப்பு. அரசு பொதுத்தேர்வு மே - 2022

PART - III

கால அளவு : 3.00 மணி நேரம் ] **வணிகவியல் (விடைகளுடன்)** [மொத்த மதிப்பெண்கள் : 90

**அறிவுரைகள்:**

(1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

## பகுதி - I

**குறிப்பு :** (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **[20 × 1 = 20]**

(ii) கொடுக்கப்பட்டுள்ள **மாற்று** விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. பங்கு மாற்றகமானது _________.
   அ) முதலீட்டாளர்களுக்கு பாதுகாப்பு
   ஆ) ஊக வணிகத்திற்கான வசதியைத் தருகிறது
   இ) உடனடி சந்தை
   ஈ) மேற்சொன்ன அனைத்தும்

2. ஒரு தனியார் நிறுமத்தில் குறைந்தது _________ இயக்குநர்கள் இருக்க வேண்டும்.
   அ) மூன்று ஆ) ஏழு
   இ) இரண்டு ஈ) ஐந்து

3. _________ புதிய தொழிற்துறைக் கொள்கையின் விளைவாகும், இதனால் உரிமம் முறை அகற்றப்பட்டது.
   அ) தனியார்மயமாக்கல்
   ஆ) தாராளமயமாக்கல்
   இ) உலகமயமாக்கல்
   ஈ) இவற்றில் எதுவும்த இல்லை

4. மாற்றுமுறையாவணமானது _________.
   அ) மாற்றித்தரும் தன்மை கொண்டது
   ஆ) அதன் உரிமையாளரின் உரிமை பழுதற்றது
   இ) (அ) மற்றும் (ஆ) சரியானது
   ஈ) (அ) மற்றும் (ஆ) தவறானது

5. மனிதவள மேலாண்மை என்பது _________ ஆகும்.
   அ) கோட்பாடு மற்றும் நடைமுறை
   ஆ) வரலாறு மற்றும் புவியியல்
   இ) அறிவியல் மற்றும் கலை
   ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

6. தொழில் முனைவோரை கீழ்குறிப்பிட்டபடி எப்படி வகைப்படுத்த முடியாது?
   அ) ஊழியர் ஆ) இடர் தாங்கி
   இ) அமைப்பாளர் ஈ) புதுமைபடைப்பாளர்

7. நவீன சந்தையியலின் இறுதியான நோக்கம் _______.
   அ) நுகர்வோர் திருப்தி
   ஆ) அதிகமான இலாபம்
   இ) சமுதாயத்திற்கு சேவை
   ஈ) குறைவான லாபம்

8. விளம்பரம் என்பது ஒரு _______ ஆட்சேர்ப்பு வளமாகும்.
   அ) முகவர் ஆ) அக வளங்கள்
   இ) புறத்திறனீட்டல் ஈ) புற வளங்கள்

9. பொருத்தமற்ற விண்ணப்பதாரரை நீக்குவதற்கான செயல்முறை _______ என அழைக்கப்படுகிறது.
   அ) நேர்காணல் ஆ) தேர்வு
   இ) தூண்டுதல் ஈ) ஆட்சேர்ப்பு

10. வேலையை பல்வேறு சிறு பணிகளாக பிரிப்பதை _______ என்பர்.
    அ) வேலைப்பகிர்வு ஆ) ஒழுங்கு
    இ) சமத்துவம் ஈ) ஒற்றுமை

11. அரசுப் பத்திரங்கள் _______ போன்ற நிறுவனங்களால் வழங்கப்படுகின்றன.
    அ) மாநில அரசுகள்
    ஆ) பகுதி அரசு அமைப்புகள்
    இ) மத்திய அரசு
    ஈ) மேற்கூறிய அனைத்தும்

12. மேலாண்மை என்பது __________ன் செயல் ஆகும்.
    அ) மேற்பார்வையாளர் ஆ) மேலாளர்
    இ) உயரதிகாரி ஈ) கீழ்பணியாளர்

13. கீழ்க்கண்டவற்றுள் எது பங்குகள் மற்றும் பத்திரங்களை வாங்கி, விற்கும் நடவடிக்கையை மேற்கொள்கிறது?
    அ) உள்ளூர் சந்தை ஆ) பங்கு சந்தை
    இ) குடும்ப சந்தை
    ஈ) தயாரிப்பு பொருள் சந்தை

14. சரக்கு விற்பனைச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு:
    அ) 1930 ஆ) 1940
    இ) 1960 ஈ) 1997

15. __________ கூட்டம் நிறுமத்தின் வாழ்நாளில் ஒரு முறை மட்டுமே கூட்டப்படும்.?
    அ) சிறப்பு ஆ) சட்டமுறை
    இ) வகுப்பு ஈ) ஆண்டு பொது

16. சந்தையில் உயர் நிலையில் இருப்பவர் யார்?
    அ) மொத்த விற்பனையாளர்
    ஆ) வாடிக்கையாளர்
    இ) சில்லறை விற்பனையாளர்
    ஈ) விற்பனையாளர்



orders@surabooks.com Ph:9600175757 / 8124201000
Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com
www.surabooks.com



17. மூலதனச் சந்தை என்பது _________ க்கான ஒரு சந்தை ஆகும்.
அ) நீண்ட கால நிதி ஆ) குறுகிய கால நிதி
இ) குறுகிய மற்றும் நடுத்தர கால நிதி
ஈ) நடுத்தர கால நிதி

18. பின்வருவனவற்றுள் எது மேலாண்மையின் முக்கிய பணி அல்ல?
அ) ஒழுங்கமைத்தல் ஆ) முடிவெடுத்தல்
இ) பணியமர்த்தல் ஈ) திட்டமிடுதல்

19. 'நுகர்வோரியல்' எனும் சொல் தோன்றிய ஆண்டு:
அ) 1954 ஆ) 1960 இ) 1958 ஈ) 1957

20. நாட்டில் ___________ பங்கு சந்தைகள் உள்ளன
அ) 20 ஆ) 21 இ) 25 ஈ) 24

## பகுதி - II

**குறிப்பு :** **ஏதேனும் 7** வினாக்களுக்கு விடையளிக்கவும். அதில் **30-வது** வினாவிற்கு **கட்டாயம்** விடையளிக்க வேண்டும்.
**7 × 2 = 14**

21. மேலாண்மை என்றால் என்ன?
22. பங்குச் சந்தை என்றால் என்ன?
23. மனிதவள மேலாண்மையின் இயல்புகளில் ஏதேனும் இரண்டினை விளக்குக.
24. களச் சந்தை மற்றும் எதிர்கால சந்தை என்றால் என்ன?
25. கலப்படத்திற்கு நான்கு எடுத்துக்காட்டுகள் தருக.
26. தனியார்மயமாக்கல் என்றால் என்ன?
27. நிகழ் சரக்கு என்றால் என்ன?
28. மகளிர் தொழில் முனைவோர் சந்திக்கும் ஏதேனும் இரண்டு சிக்கல்களை எழுதுக.
29. டிஜிட்டல் இந்தியாவைப் பற்றி குறிப்பு வரைக.
30. ஒரு நிறுமத்தில் முக்கிய நிர்வாக நபர்களை பட்டியலிடுக.

## பகுதி - III

**குறிப்பு :** **ஏதேனும் 7** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **40-க்கு கட்டாயம்** விடையளிக்கவும்.
**7 × 3 = 21**

31. மேலாண்மையை நிர்வாகத்திலிருந்து வேறுபடுத்துக.
32. கருவூல இரசீதின் பொது இயல்புகள் யாவை?
33. மான் ஊக வணிகரை விளக்குக.
34. வேலைவாய்ப்பு இணையதளங்கள் என்றால் என்ன?
35. சந்தையிடுகையின் நோக்கங்கள் யாவை? (ஏதேனும் 3)
36. நிவாரணத்திற்கான உரிமைகள் பற்றி நீவிர் அறிவது யாது?
37. புதிய பொருளாதார கொள்கை பற்றி சிறு குறிப்பு வரைக.
38. தற்போதைய / இருக்கின்ற சரக்கு என்றால் என்ன?.
39. ஸ்டார்ட்அப் இந்தியா என்றால் என்ன?
40. இந்தியா டெக் பொது நிறுமம் நேர்மை பங்குகள் மற்றும் முன்னுரிமைப் பங்குகளை வெளியிட்டது. சில ஆண்டுகளுக்கு பிறகு அந்நிறுமம் கலைப்பிற்கு உள்ளானது. நிறும கலைப்பின் போது எவ்வகை பங்குநர் தங்கள் பங்கு முதலை முதலில் திரும்பப் பெறுவர்? விளக்குக.

## பகுதி - IV

**குறிப்பு :** **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
**7 × 5 = 35**

41. அ) மேலாண்மையின் முதன்மைப் பணிகள் எவையேனும் ஐந்தினை விளக்குக.

**(அல்லது)**

ஆ) இந்திய பொருளாதாரத்தல் எல்.பி.ஜி. (LPG)-யின் தாக்கத்தை விளக்குக.

42. அ) பணச்சந்தை மற்றும் மூலதனச் சந்தை இரண்டிற்கும் இடையிலான வேறுபாடுகளில் எவையேனும் ஐந்தினை விவரிக்கவும்.

**(அல்லது)**

ஆ) நிபந்தனை மற்றும் நம்புறுதிகளை வேறுபடுத்துக.

43. அ) பங்குசந்தை பணிகளில் ஏதேனும் ஐந்தினை விவரிக்கவும்.

**(அல்லது)**

ஆ) கடன் பத்திரங்களின் வகைகள் எவையேனும் ஐந்தினை விளக்குக.

44. அ) ஆட்சேர்ப்பு முறையில் உள்ள புற வளங்கள் எவையேனும் ஐந்தினை விளக்குக.

**(அல்லது)**

ஆ) நுகர்வோரின் பொறுப்புகள் எவையேனும் ஐந்தினை எழுதுக.

45. அ) பாரம்பரிய சந்தையிடுகை எவ்வாறு மின் சந்தையிலிருந்து வேறுபடுகிறது என்பதை விளக்குக.

**(அல்லது)**

ஆ) தொழில் முனைவோரின் சிறப்பியல்புகள் எவையேனும் ஐந்தினை விளக்குக.

46. அ) "நுகர்வோர் பாதுகாப்பில்" வணிகத்தின் பங்குகள் எவையேனும் ஐந்தினை விளக்குக.

**(அல்லது)**

ஆ) எவையேனும் ஐந்து வகையான நிதிச் சந்தைகளை விவரிக்கவும்.

47. அ) மின்னணு சந்தையிடுதலின் நன்மை தீமைகளை விளக்குக.

**(அல்லது)**

ஆ) நவீன மேலாண்மைக் கோட்பாடுகளில் ஏதேனும் ஐந்தினை விவரிக்கவும்.

❁❁❁❁

# விடைகள்

## பகுதி - I

1. ஈ) மேற்சொன்ன அனைத்தும்
2. இ) இரண்டு
3. ஆ) தாராளமயமாக்கல்
4. அ) மாற்றித்தரும் தன்மை கொண்டது
5. இ) அறிவியல் மற்றும் கலை
6. அ) ஊழியர்
7. அ) நுகர்வோர் திருப்தி
8. ஈ) புற வளங்கள்
9. ஆ) தேர்வு
10. அ) வேலைப்பகிர்வு
11. ஈ) மேற்கூறிய அனைத்தும்
12. ஆ) மேலாளர்
13. ஆ) பங்கு சந்தை
14. அ) 1930
15. ஆ) சட்டமுறை
16. ஆ) வாடிக்கையாளர்

orders@surabooks.com Ph:9600175757 / 8124201000
Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com
www.surabooks.com



17. அ) நீண்டகால நிதி
18. ஆ) முடிவெடுத்தல்
19. ஆ) 1960
20. ஈ) 24

## பகுதி - II

21. ஒரு வணிக நிறுவனத்தின் மேலாண்மை செய்பவர்கள் மற்றும் விசயங்களை நிர்வகிப்பதற்கான ஒழுங்கமைக்கப்பட்ட வழி மேலாண்மை என்று அழைக்கப்படுகின்றது.

22. பங்குச் சந்தை என்பது பெரு நிறுவன மற்றும் பிற பத்திரங்களை வாங்குவதற்கும் விற்பனை செய்வதற்கும் ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட சந்தையாகும். இங்கே, பத்திரங்கள் சில நன்கு வரையறுக்கப்பட்ட விதிகள் மற்றும் கட்டுப்பாடுகள் படி வாங்கப்பட்டு விற்கப்படுகின்றன.

23. (i) **உலகளவில் பொருத்தமானது :** மனித வள மேலாண்மை உலகளவில் பொருந்தக் கூடியதாக உள்ளது.
(ii) **இலக்கு சம்பந்தமானது :** ஒரு நிறுவனத்தில் உள்ள மனித வளத்தை சிறந்த முறையில் பயன்படுத்துவதன் மூலம் அந்நிறுவனத்தின் குறிக்கோள்களை அடைவது சாத்தியமாகிறது.

24. **களச் சந்தை:** பொருளுக்கான விற்பனை நடவடிக்கை முடிவடைந்த அதே நேரத்தில் அப்பொருள் விநியோகம் செய்வது மட்டுமன்றி உடன் உரிமை மாற்றமும் செய்யப்படுகிறது.

**எதிர்கால சந்தை:** எதிர்காலச் சந்தையில் பொருட்கள் விநியோகம் செய்த பிறகு அதற்கான தொகை எதிர்வரும் காலங்களில் வழங்குவதாக ஒப்பந்தம் மேற்கொண்டு அதன் அடிப்படையில் நடைபெறும் சந்தையை எதிர்கால சந்தை எனலாம்

25. (i) உணவு தானியங்களில் சிறிய கற்கள் சேர்க்கப்படுகின்றன.
(ii) தேங்காய் எண்ணெயில் பாமாயில் கலக்கப்படுகின்றது.
(iii) காபிப்பொடியுடன் புளி விதையின் பொடி சேர்க்கப்படுகிறது.
(iv) கருப்பு மிளகுடன் பப்பாளி விதை சேர்க்கப்படுகின்றது.

26. தனியார்மயமாக்கல் என்றால் பொதுதுறை நிறுவனங்களின் உரிமைகளை தனியார் நிறுவனங்களுக்கு மாற்றி தரும் நிகழ்வு அல்லது கொள்கையை குறிப்பிடுவதாகும். சுருங்ககூறின் தனியார்மயமாக்கல் என்பது பொதுதுறைக்கு ஒதுக்கப்பட்ட தொழில்களை தனியார் துறைக்கு மாற்ற அனுமதி அளிப்பதாகும்.

27. இது ஒருவகை எதிர்கால சரக்கு ஆகும். இது விற்பவர் கைவசம் வந்து சேர்வது எதிர்காலத்தில் நடக்கும் நிகழ்ச்சியைப் பொறுத்தது. உதாரணமாக 'A' என்பவர் 'B' என்பவரோடு ஒரு குறிப்பிட்ட ஓவியம் 'C' யிடமிருந்து கிடைத்தால் விற்பனை செய்கிறேன் என ஒப்பந்தத்தில் ஈடுபட்டால் அந்த ஓவியப் பொருள் வருநிகழ்வுசார் சரக்கு என்று பொருட்படும்.

28. (i) நிதிப்பிரச்சினை.
(ii) கல்வியறிவு இன்மை

29. டிஜிட்டல் இந்தியா திட்டத்தின் மூலம் அனைத்து அரசின் சேவைகளும் பயனாளிகளுக்கு மின்னணு முறையில் வழங்கப்பட்டு வருகிறது. இதனால் இந்திய பொருளாதாரம் மின்னணு பொருளாதாரமாக மாறி வருகிறது. உலகெங்கும் கிடைக்கும் பொருட்கள் மற்றும் பணிகளை மக்கள் மின்னணு முறையில் பெற வகை செய்திடும் அறிவு பொருளாதாரமாக இந்திய பொருளாதாரம் மாறி வருகிறது என்றால் மிகையாகாது.

30. (i) முதன்மை பிரதான நிர்வாக அதிகாரி
(ii) நிர்வாக இயக்குநர் அல்லது மேலாளர்
(iii) நிறுமத்தின் செயலாளர்
(iv) முழுநேர இயக்குநர்
(v) முதன்மை பிரதான நிதி அலுவலர்

## பகுதி - III

31.

| வ. எண் | ஒப்பீட்டின் அடிப்படை | மேலாண்மை | நிர்வாகம் |
|---|---|---|---|
| (i) | பொருள் | மேலாண்மை என்பது மற்றவர்களின் முயற்சி மற்றும் ஒத்துழைப்புடன் நோக்கங்களை எய்தும் ஒரு கலையாகும். | ஒரு குழுவால் ஒரு நிறுவனத்தை நிர்வகிப்பதற்கான செயல் முறையே நிர்வாகம் என்று அழைக்கப்படுகின்றது. |
| (ii) | அதிகாரம் | மத்திய மற்றும் கீழ்மட்ட அளவில் | உயர் மட்ட அளவில் |
| (iii) | பங்கு | நிறைவேற்றம் | முடிவெடுத்தல் |

32. கருவூல இரசீது பின்வரும் பொதுவான இயல்புகளை உடையது. அவை பின்வருமாறு.
(i) வெளியிடுபவர்
(ii) நிதி இரசீது
(iii) நீர்மைத் தன்மை
(iv) முக்கிய ஆதாரம்
(v) பண மேலாண்மை

33. **கலைமான் (Stag) :**
(i) கலைமான் ஊக வணிகர் முன்னெச்சரிக்கை உடையவர். இவர் ஒரு நிறுமத்தின் பங்குகள் முனைமத்தில் (at premium) விற்கப்படும் என்று அறிந்தவுடன், புதிய விடுப்புகளில் பங்கு கோரி விண்ணப்பம் செய்வார்.
(ii) தனக்கு பங்குகள் ஒதுக்கப்பட்டால் அவற்றை முனைமம் பெற்றுக்கொண்டு விற்று விடுவார்.
(iii) இவர் 'முனைம வேட்டையாளர்' என்று அழைக்கப்படுகிறார்.

**34.** (i) நிறுவனங்கள் வேலைவாய்ப்பு இணையதளங்களைப் பயன்படுத்தி தாங்கள் எதிர்பார்க்கும் தகுதியுடைய பணியாளர்களை தேர்வு செய்து காலியிடங்கள் பூர்த்தி செய்யலாம்.
(ii) படித்த இளைஞர்கள் தங்கள் தகுதிக்கு ஏற்றார் போன்ற வேலையை தேர்வு செய்ய இந்த இணையதளங்கள் உதவு செய்கிறது.
(iii) இந்த இணையதளங்கள் மூலம் வேலை இல்லா நிலை தவிர்க்கப்படுகிறது.

orders@surabooks.com Ph:9600175757 / 8124201000
Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com
www.surabooks.com



**35.** (i) நவீன சந்தையிடுகை கொள்கையானது அறிவு திறத்தை பயன்படுத்த உதவுகிறது.

(ii) சந்தையிடுகை துறையில் மேம்பாட்டை ஏற்படுத்துகிறது.

(iii) கொள்கை வழிகாட்டல் மேம்பாடு மற்றும் நல்லதொரு பயனுள்ள முடிவினை செயல்படுத்துகிறது.

(iv) சந்தையிடுகை தொடர்புள்ள பிரச்சினைகளுக்கு நல்ல தீர்வு காண வழிவகை செய்கிறது.

(v) சந்தையிடுகை தொடர்பான பிரச்சினை குறித்து மேலும் தகவல்களை கண்டு உணருகிறது.

(vi) முன்னேற்ற செயல் குறித்து சரியான நடவடிக்கை மேற்கொள்கிறது.

**36. நிவாரணம் காணும் உரிமை Right to seek Redressal**

(i) நிவாரணம் காணும் செயல் முந்தைய நடவடிக்கைக்கு மேலே உள்ளது. புகார்களும் அதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகளும் கேட்கப்பட வேண்டியவை அல்ல.

(ii) ஆனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய காலத்திற்குள் இழப்பீடு வழங்கப்பட வேண்டும்.

(iii) நுகர்வோரின் புகார்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் கோரிக்கைகளை உடனடியாக சரிசெய்ய வேண்டும் குறைதீர்ப்பு செயலினால் நுகர்வோர் நம்பிக்கை அதிகரிக்கும் மற்றும் வாங்குபவர்களுக்கும் நியாயம் கிடைக்கும்.

(iv) ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில் உண்மையான கூற்றுகளுக்கு நியாயமான மற்றும் உறுதியான தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும்.

37. (i) இந்தியா 1991 ஆம் ஆண்டு, பன்னாட்டு பண நிதியம் (IMF) என பிரபலமாக அறியப்பட்ட சர்வதேச மறு சீரமைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான சர்வதேச வங்கி (IBRD)ஐ அணுகுகிறது மேலும் வெளிநாட்டு கடன்களை திருப்பி செலுத்த $7 மில்லியனை அமெரிக்க டாலர்களை கடனாக பெற்றது. தனியார் துறை மீதான கட்டுப்பாடுகளை நீக்குதல் மற்றும் இந்தியாவிற்கும் மற்ற நாடுகளுக்கும் இடையில் வர்த்தக கட்டுப்பாட்டை அகற்றுவதன் மூலம் பொருளாதாரத்தை தாராளமயமாக்கல் என்பது இந்த நிறுவனங்களின் எதிர்பார்ப்பு ஆகும்.

(ii) உலக வங்கி மற்றும் சர்வ தேச நாணயநிதியத்தின் (IMF) நிலைமைகளுக்கு இந்தியா உட்பட்டு மற்றும் பல்வேறு பொருளாதார சீர்திருத்தங்கள் கொண்ட புதிய பொருளாதாரக் கொள்கையை (NEP) அறிவித்தது. இந்த புதிய பொருளாதார சீர்திருத்தங்கள் பொதுவாக எல்பிஜி (LPG) அல்லது தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கல் மற்றும் உலகமயமாக்கல் என்று அழைக்கப்படுகிறது.

**38.** ஒப்பந்தம் செய்யும் போது விற்பனையாளரின் கைவசம் உள்ள சரக்கு இருக்கின்ற சரக்கு. விற்பனை செய்ய முகவரின் வசம் ஒப்படைக்கப்பட்ட சரக்கும் அல்லது அடமானம் பெற்றவர் விற்கும் அடமான சொத்தும் இருக்கின்ற சரக்கு என்ற பொருளில் உள்ளடக்கம் பெறும்.

**இருக்கின்ற சரக்கு :** ஒப்பிய சரக்கு, உறுதி செய்யப் பட்ட சரக்கு, உறுதியிடா சரக்கு.

(i) **ஒப்பிய சரக்கு :** விற்பனை ஒப்பந்தம் செய்யும் போது இனம் கண்டு ஒப்புக் கொள்ளப்பட்ட சரக்கு ஒப்பிய சரக்கு.

(ii) **உறுதி செய்யப்பட்ட சரக்கு:** ஒப்பிய சரக்கைப் போன்ற பொருள் உடையது தான் உறுதி செய்யப்பட்ட சரக்கு. அதாவது விற்பனை ஒப்பந்தம் செய்யப்பட்ட பின்பு இன்னதுதான் என்று உணரப்பட்ட சரக்கு உறுதி செய்யப்பட்ட சரக்கு.

(iii) **உறுதியிடா சரக்கு :** ஒப்பந்தம் செய்யும் முன்பாக இவைதான் என இனம் காணப்படாத சரக்கு.

**39.** (i) தொடக்க நிலையில் உள்ள தொழில்கட்கு ஆலோசனை வழங்குவது, வளர்ப்பது, ஆதரவு அளிப்பது போன்ற நடவடிக்கைகள் மூலம் அவற்றை வளர்க்கும் திட்டத்தினை 2016ம் ஆண்டு சனவரியில் துவங்கியது.

(ii) துவக்கக் காலம் முதலே பல தொழில் முனைவோர்கள் பலதரப்பட்ட தொழில் வினைகளை துவக்கி வெற்றி கண்டனர். நிதிகளின் நிதி (Fund of Fund) என்ற நிதியின் மூலம் தொடக்க நிலை தொழில் வினைகளுக்கு நிதி வசதி செய்து தரப்பட்டு வருகிறது.

**40.** நிறுமச் சட்டம் 2013, பிரிவு (42)ன்படி முன்னுரிமைப் பங்குகள் என்பது முன்னுரிமைப் பங்குதாரர்கள் நிறுமம் இயங்கும் போதும், கலைக்கப்படும்போதும், சாதாரணப் பங்குதாரர்களை விட முன்னுரிமையை பெறுவதால் இது இப்பெயரால் அழைக்கப்படுகின்றன. இப்பங்குகளுக்கு இந்த உரிமை வழங்கப்பட்டுள்ளதால், பங்காதாய விகிதமும் ஒரு குறிப்பிட்ட விகிதமாகவே உள்ளது. மேலும் சாதாரண பங்குதாரர்களக்குச் சட்டத்தின் மூலம் அளிக்கப்பட்டு உள்ள உரிமைகள் எதுவும் முன்னுரிமை பங்குதாரர்களுக்கு கிடையாது.

எனவே, இந்தியா டெக் பப்ளிக் நிறுவனம் கலைப்பு நேரத்தில் முன்னுரிமை பங்கு மூலதனத்தை முதலில் திருப்பிச் செலுத்தும்.

## பகுதி - IV

**41. (அ)** I. **முதன்மைப்பணிகள் :**

(i) **திட்டமிடுதல்:** திட்டமிடுதல் என்பது மேலாண்மையின் செயல்பாடுகளில் முதன்மை ஆனது ஆகும். திட்டமிடுதல் என்பது வருங்கால தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான ஒரு ஆக்கபூர்வமான மதிப்பீடு ஆகும்.

(ii) **அமைத்தல் :** பணியாளர்களுக்கு பணிகளை ஒப்படைவு செய்வதும் அப்பணிகளை நிறைவேற்றுவதற்கு போதிய அதிகாரங்களை வழங்குவதும் மேலும் அதனால் ஏற்படும் விளைவுகளுக்கு பணியாளரே பொறுப்பேற்க செய்வதும் அமைத்தல் பணி எனப்படுகிறது.

(iii) **பணியமர்த்தல் :** பணியமர்த்தல் என்பது பணியாளர்களைத் தேர்வு செய்தல் மற்றும் திறமையான பணியாளர்களுக்கு பணியிடமளித்தல் செயல்பாடுகளை பணியமர்த்தல் உள்ளடக்கியுள்ளது.

(iv) **இயக்குவித்தல் :** தற்போதைய இலக்குகளை சாதிக்கும் பொருட்டு தொடர்ச்சியான அடிப்படையில் செயலூக்கமளித்தல், முன்னணியிலிருத்தல், வழிகாட்டுதல் மற்றும் கீழ்நிலைப் பணியாளர்களுடன் தொடர்புபடுத்துதல் போன்றன இயக்குதலைக் குறிக்கிறது.

(v) **கட்டுப்படுத்துதல் :** ஊக்க ஊதிய உயர்வு மற்றும் பதவி உயர்வு அளிக்கும் முடிவுகளை எடுப்பதற்கும் பணியாளர்களின் செயல்திறனை மதிப்பிடுவதற்கும் கட்டுப்படுத்துதல் செயல்பாடு பயன்படுகிறது.

**(அல்லது)**

orders@surabooks.com Ph:9600175757 / 8124201000
Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com
www.surabooks.com



**(ஆ) தாராளமயமாக்கலின் தாக்கம் :**

(i) தாராளமயமாக்கலுக்குப் பிறகு இந்தியா மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இந்தியாவின் பங்களிப்பு (GDP) 1.3 மில்லியன்களாக வளர்ச்சி அடைந்துள்ளது.

(ii) தாராளமயமாக்கல் அதிக அளவு பன்னாட்டு வணிகத்தை பெருக்கியதுடன் வெளிநாட்டு முதலீடுகளை அதிக அளவில் ஈர்த்திட உதவியது.

(iii) பல்வேறு பொருள்களுக்கான புதிய சந்தை வாய்ப்புகளை உருவாக்கியதோடு நகர்புற மற்றும் கிராமபுற முன்னேற்றத்திற்கு உதவியது.

(iv) தொழில் விரிவாக்கத்திற்கு மிக எளிய சொற்பதர்வுகளில் வங்கிகளில் கடன் பெற வழிவகை செய்ய உதவியது.

**தனியார்மயமாக்கலின் தாக்கம் :**

(i) நாட்டின் நிதிப்பற்றாக்குறை மற்றும் கடன் சுமைகளை குறைப்பதன் மூலம் நாட்டின் நிதி வளர்ச்சிக்கு பெரிய அளவில் பங்களிப்பு செய்து

(ii) பொதுத்துறை நிறுவனங்களின் செயல்திறனை பன்மடங்கு அதிகரித்தல்.

(iii) நுகர்வோர்களுக்கு சிறந்த பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குதல்.

(iv) வெளிநாட்டு நேரடி முதலீட்டை உருவாக்குதல்.

**உலகமயமாக்கலின் தாக்கம் :**

(i) குறைந்த இயக்கம் செலவுகளின் அடக்கம் மற்றும் புதிய மூல பொருட்கள் மற்றும் கூடுதல் சந்தை அனுகல் மூலம் பெரிய நிறுவனங்கள் போட்டி திறனை பெறுகின்றன.

(ii) பன்னாட்டு நிறுவனங்கள் (MNC's) பொருட்களை தயாரிக்க வாங்க மற்றும் பொருட்களை விற்பனை செய்ய முடிகின்றது.

(iii) உலகமயமாக்கல் நுகர்வோர் பொருட்களின் சந்தையை வெகுவாக (ஏற்றத்துடன்) பெருக்கிட உதவும் வாய்ப்பை உருவாக்கலாம்.

42. **(அ) பணச்சந்தை மற்றும் மூலதனச் சந்தை வேறுபாடுகள் :**

| வ. எண் | நன்மைகள் | பணச்சந்தை | மூலதனச்சந்தை |
|---|---|---|---|
| (i) | நிதியின் காலம் | இச்சந்தை ஒரு வருட காலத்திற்கும் மிகாமல் நடக்கும் குறுகிய கால நிதிகளுக்கான சந்தையாகும். | இச்சந்தை ஒரு வருட காலத்திற்கும் மேலான நீண்ட கால நிதிகளுக்கான சந்தையாகும். |
| (ii) | வணிக ஆவணங்கள் | வணிக இரசீதுகள் போன்ற ஆவணங்களுடன் தொடர்புடையது (மாற்றுமுறை ஆவணங்கள், கருவூலச்சீட்டு, வணிகத் தாள் போன்றவை) | பங்குகள்கள்,கடனீட்டுப்பத்திரங்கள், அரசு பத்திரங்கள் போன்ற ஆவணங்களுடன் தொடர்புடையது. |
| (iii) | இடர் அளவு | கடன் மற்றும் சந்தை ஆபத்து குறைந்தளவு உள்ளது. | கடன் மற்றும் சந்தை ஆபத்து அதிகளவு உள்ளது. |
| (iv) | நீர்மைத்தன்மை | அதிக அளவு நீர்மைத்தன்மை கொண்டது. | மூலதனச் சந்தை குறைந்தளவு நீர்மைத்தன்மை கொண்டது. |
| (v) | பரிவர்த்தனை நடைபெறும் இடம் | பரிவர்த்தனைகள் பெரும்பாலும் தொலைபேசி வழியாகவே நடைபெறுகின்றன. இதற்கு முறையான இடம் ஏதுமில்லை. | பரிவர்த்தனைகள் ஒரு முறையான இடத்தில் இடம் பெறுகின்றன. உதாரணம்: பங்கு பரிமாற்றகம். |

**(அல்லது)**

**(ஆ)**

| வ.எண் | வேறுபடுத்தும் கூறுகள் | நிபந்தனைகள் | நம்புறுதிகள் |
|---|---|---|---|
| (i) | பொருள் | ஒப்பந்தத்தின் கருப்பொருளாகத் திகழ்வது. | நம்புறுதி ஒப்பந்தத்திற்குத் துணையாக இருக்கிறது. |
| (ii) | முக்கியத்துவம் | ஒப்பந்தத்தில் நிபந்தனையை மீறுவது ஒப்பந்தத்தை மீறுவதாகக் கொள்ளப்படுகிறது. | நம்புறுதியை மீறுவது ஒப்பந்தத்தினை மீறுவதற்கு ஒப்பாகாது. |
| (iii) | உரிமை மாற்றம் | நிபந்தனை நிறைவேற்றாமல் உரிமை மாற்றம் நிகழ முடியாது. | நம்புறுதியை நிறைவேற்றாமல் உரிமை மாற்றம் நிகழ முடியும். |
| (iv) | பரிகாரம் / தீர்வு | நிபந்தனை மீறுவதனால் ஒப்பந்தத்தில் பாதிக்கப்பட்ட நபர் ஒப்பந்தத்தை நீக்கிக் கொள்வதுடன் நட்ட ஈடு கோரும் உரிமையைப் பெறுகிறார். | நம்புறுதியை மீறுவதனால் ஒப்பந்தத்தில் பாதிக்கப்பட்டவர் நட்ட ஈடு கேட்கும் உரிமையை மட்டுமே பெற்றுள்ளார். |

orders@surabooks.com Ph:9600175757 / 8124201000
Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com
www.surabooks.com



43. (அ) (i) **உடனடி மற்றும் தொடர்ச்சியான சந்தை :** பங்கு பரிவர்த்தனை உண்மையில், ஏற்கனவே இருக்கும் பத்திரங்களுக்கு ஒரு சந்தை. ஒரு முதலீட்டாளர் தனது பத்திரங்களை விற்க விரும்பினால், அவர் எளிதில் விரைவாக பங்குச் சந்தைகளில் அவற்றை விற்பனைச் செய்யலாம்.

(ii) **பத்திரங்கள் சரியான மதிப்பீடு :** பத்திரங்கள் வாங்குதல் மற்றும் விற்பனை செய்யப்படும் விலைகள் பதிவு செய்யப்பட்டு பொதுமக்களுக்கு வழங்கப்படுகின்றன.இந்த விலைகள் "சந்தை மேற்கோள்கள்" என்று அழைக்கப்படுகின்றன

(iii) **முதலீட்டாளர்களுக்கு பாதுகாப்பு :** ஒரு பங்கு பரிவர்த்தனையில் அனைத்து ஒப்பந்தங்களும் நன்கு வரையறுக்கப்பட்ட விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு ஏற்ப உள்ளன. உதாரணமாக, தங்கள் சேவைகளுக்கான அதிகமான கமிஷன்களை புரோக்கர்கள் வசூலிக்க முடியாது.

(iv) **மூலதனத்தை சரியான முறையில் வழிப்படுத்துதல்:** மக்கள் நல்ல லாபத்தை ஈட்டக் கூடிய அத்தகைய நிறுவனங்களின் பங்குகளில் முதலீடு செய்ய விரும்புகிறது. ஆனால் பங்குச் சந்தைகளுக்கு, இந்த சேமிப்புக்கள் இலாபமற்ற அலகுகள் பங்குகள் மீது வீணடிக்கப்படக்கூடும்.

(v) **மூலதன உருவாக்கத்திற்கான உதவி:** பங்குச் சந்தை பரிமாற்றம் பல்வேறு தொழில்துறை பத்திரங்கள் மற்றும் அவற்றின் விலைகள் மற்றும் அவர்களின் கொள்முதல் மற்றும் விற்பனைக்கு வழங்கிய வசதிகள் ஆகியவற்றை மக்களுக்கு சேமித்து, முதலீடு செய்ய தூண்டுகிறது. பங்கு பரிமாற்றங்கள், ஒரு நிலையான மூலதனத்தை தொழில்துறையில் உறுதிப்படுத்துகின்றன மற்றும் தொழில்துறை வளர்ச்சிக்கு உதவும்.

**(அல்லது)**

(ஆ) 1. **மாற்ற இயலாத கடன் பத்திரங்கள்** (NCD) **:** மாற்ற இயலாத கடன் பத்திரங்கள் அவற்றின் கடன் இயல்பை தக்க வைத்துக் கொள்கின்றன. மற்றும் சாதாரணப் பங்குகளாக மாற்றப்பட முடியாது.

2. **பகுதி மாற்றத்தக்க கடன் பத்திரங்கள்** (PCD) **:** பகுதி மாற்றத்தக்க கடன் பத்திரங்களின் நிலையில் அவைகளின் ஒரு பகுதி வெளியிடுபவர் அறிவிக்கும் சமயம் எதிர்காலத்தில் சாதாரணப் பங்குகளாக மாற்றப்படுகின்றன. வெளியீட்டாளர் மாற்றி வீதத்தை முடிவு செய்கிறார். இது இயல்பாக பங்கெடுப்பின் சமயம் முடிவு செய்யப்படுகிறது.

3. **முற்றிலும் மாற்றத்தக்க கடன் பத்திரங்கள்** (FCD) **:** இவை வெளியீட்டாளர் அறிவிக்கும் சமயம் முற்றிலுமாக சாதாரண பங்குகளாக மாற்றப்படுகின்றன. மாற்ற வீதமானது வெளியீட்டாளரால் முடிவு செய்யப்படுகின்றது. மாற்றப்பட்ட பிறகு முதலீட்டாளர்கள் நிறுமத்தின் சாதாரணப் பங்குதாரர்களை போலவே அதே அந்தஸ்தினை அனுபவிப்பர்.

5. **தேர்வின்படி மாற்றத்தக்க கடன் பத்திரங்கள்** (OCD)**:** தேர்வின்படி மாற்றத்தக்க கடன் பத்திரங்களின் நிலையில் இப்பங்குகளை வெளியீட்டாளர் முடிவு செய்யும் விலையிலோ (அ) வெளியீட்டின் சமயம் உடன்பட்ட விலையிலோ மாற்றிப் பெறும் தேர்வு உள்ளது.

5. **பிணையம் தரப்பட்ட கடன் பத்திரங்கள் :** நிறுமத்தின் சொத்துக்கள் மீது பற்றுப் பொறுப்பு ஏற்படுத்தி வெளியிடப்படும் பத்திரங்கள் பிணையம் தரப்பட்ட கடன் பத்திரங்கள் எனப்படும் நிறுமச் சட்டம் 2013 பிரிவு 71(3)ன் படியும், மத்திய அரசின் சட்டத் திட்டங்களுக்கு உட்பட்டு நடக்க வேண்டும்.

44. (அ) (i) **நேர்முகத் தேர்வு :** வேலை தேடி நிறுவனத்திற்கு நேரடியாக வருபவர்களை நேர்முக தேர்வின் மூலமாகவும் பணியமர்த்த முடியும்.

(ii) **வளாக தேர்வு :** கல்வி நிறுவனங்களுக்கு நேரடியாக சென்று நல்ல கல்வித் தகுதியுடைய விண்ணப்பதாரர்களை வளாகத் தேர்வின் மூலம் தேர்ந்தெடுக்கலாம்.

(iii) **தொழிற்சாலை வாயிலில் ஆட்சேர்ப்பு :** பொதுவாக சாதாரண அல்லது தற்காலிக திறனற்ற ஊழியர்கள் இந்த வழியில் மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்படுகின்றனர்.

(iv) **போட்டி நிறுவனங்கள் :** உயர் ஊதியம் மற்றும் அதிக பலன்கள் வழங்குவதன் மூலம் போட்டி நிறுவனங்களில் உள்ள திறமையான பணியாளர்களை தம்முடைய நிறுவனத்தில் பணியாற்ற ஈர்க்கும் செயல் பணியாளர் வேட்டை என அழைக்கப்படுகிறது. எடுத்துக்காட்டு விற்பனை பிரதிநிதிகள் பட்டய கணக்காளர்கள் மேலாளர்கள் ஆகியோர்.

(v) **இணைய வழி ஆட்சேர்ப்பு :** தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொடர்பில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தின் காரணமாக நிறுவனங்கள் தாங்கள் எதிர்பார்க்கும் தகுதியுடைய பணியாளர்களை உலகளவில் இணையத்தின் வாயிலாக பெற முடிகிறது. இது ஆட்சேர்ப்புக்கான தவிர்க்க முடியாத புற வள ஆதாரமாகிவிட்டது.

**(அல்லது)**

(ஆ) நுகர்வோரின் பொறுப்புகள் பின்வரும் வகையில் பட்டியலிடப்படுகின்றன.

(i) விற்பனை ஒப்பந்த சட்டத்தின் விதிகள் மற்றும் நிபந்தனைகள்படி பொருளுக்கான விலையை நுகர்வோர்கள் செலுத்த வேண்டும்.

(ii) பொருட்களை நுகர்வோரின் இருப்பிடத்தில் வழங்குமாறு விற்பனையாளரை கேட்டுக் கொள்வது அவரின் பொறுப்பாகும்.

(iii) ஒப்பந்தச் சட்டத்தின்படி குறித்த நேரத்தில் பொருட்களை நுகர்வோர் பெற்றுக் கொள்ளவில்லையென்றால் அதனால் ஏற்படும் நட்டத்திற்கு அவரே பொறுப்பாவார்.

(iv) நுகர்வோர் பொருட்களை பெற்றுக்கொண்டு தாமதமாக விற்பனையாளருக்கு பணம் செலுத்தினாலோ அல்லது பொருட்களுக்கு சேதம் ஏற்படுத்திவிட்டாலோ அதற்கான நஷ்டஈடு தர வேண்டியது நுகர்வோரின் கடமையாகும்.

(v) நுகர்வோர் தங்களிடமிருக்கும் பொருட்களை அதன் விதிமுறைகளின்படி மற்றும் முன்னெச்சரிக்கையுடன் அப்பொருட்களை பயன்படுத்த வேண்டும்.

(vi) நுகர்வோர் பொருட்கள் மீதான தனது தேவையை தெளிவாக விற்பனையாளரிடம் வெளிப்படுத்த வேண்டும்.

orders@surabooks.com Ph:9600175757 / 8124201000
Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com
www.surabooks.com



45. **(அ)**

| வ. எண் | **மின் சந்தைப்படுத்துதல்** (E-Marketing) | **பாரம்பரிய சந்தைப்படுத்துதல்** (Traditional Marketing) |
|---|---|---|
| (i) | பொருள்கள்/சேவைகளை மிக விரைவாக குறைந்த செலவில் மேம்படுத்த முடியும் | இம்முறையில் மிக தாமதமாகவும் அதிக செலவிலும் மட்டும் பொருள், சேவையை மேம்படுத்த முடியும். |
| (ii) | உலக அளவில் மிக விரைவில் மிக எளிதாக பொருள்களை மேம்படுத்தி சந்தையிட முடியும் | இம்முறையில் அவ்வளவு எளிதாக உலகளவில் பொருள்களை மேம்படுத்த முடியாது காலமும் செலவும் அதிகமாகும். |
| (iii) | வணிக நிறுவனங்கள் மிக குறைந்தளவு மனித வளத்துடன் தொழிலை விரிவுப்படுத்தலாம். | இம்முறையில் தொழிலை விரிவுப்படுத்த அதிக மனித வளம் தேவைப்படுகிறது. |
| (iv) | இம்முறையில் ஆண்டு முழுவதும் வார 7 நாட்கள் 24 மணி நேரமும் குறைந்த மனித சக்தியுடன் சந்தையிட முடியும். | இம்முறையில் ஆண்டு முழுவதும் 7 நாட்களிலும் 24 மணி நேரமும் சந்தையிடுவது இயலாத காரியம். |

**(அல்லது)**

**(ஆ) தொழில் முனைபவரின் சிறப்பியல்புகள் :**

(i) **தொழில் துணிகர உணர்வு :** தொழில் முனைபவர் தான் மேற்கொண்ட தொழிலில் ஏற்படும் இடர்களை துணிவுடன் எதிர்கொள்ள வேண்டும். வினையை நடத்தி வரும்போது ஏற்படும் இயற்கையான ஏமாற்றங்கள் அல்லது தோல்விகள் அவரின் ஆர்வத்தை சிதைக்கா வண்ணம் துணிவுடன் செயல்படுவோர் ஆவார்.

(ii) **தன்னம்பிக்கை :** தன்னம்பிக்கை ஒரு மனிதனுக்கு அழகு ஏற்படுத்துகிறது. எதிர்மறை உணர்வுகளான அசௌகரியங்கள், ஏமாற்றங்கள், தோல்விகள் மற்றும் தொல்லைகள் தொழில் முனைபவரது மன உறுதியை குலைக்கக் கூடாது.

(iii) **நெகிழ்வு தன்மை :** மாறும் சூழ்நிலைகட்கு ஏற்ப தொழில் முனைபவன் தன் முடிவை அல்லது நடவடிக்கைகளை மாற்றிக்கொள்ளும் நெகிழ்வு தன்மையை கடைப்பிடிக்க வேண்டும். நெகிழ்வு தன்மை அற்றவர்கள் தொழில் முனைவில் வெற்றி காண்பது இயலாத ஒன்றாகும்.

(iv) **புதுமை புகுத்தல் :** தொழில் முனைபவர் புதுமை படைப்பாளராக இருந்திட வேண்டும். ஏதேனும் ஒரு புதுமையைப் புகுத்தி சந்தையில் நிரந்தரமான இடத்தை பிடிக்க வேண்டும். புதுமை என்பது புத்தம் புதிய பொருளாகவோ, புதுமை பண்புகளை பொருளில் நுழைப்பதோ, புதிய சந்தையை உருவாக்குவதோ, புதிய கச்சா பொருளை கொண்டு பொருளை உற்பத்தி செய்வதோ, புதிய உற்பத்தி முறையை கையாள்வதோ மற்றும் புதிய நுட்பத்தை மேற்கொள்வது.

(v) **வளத்தை திரட்டுபவர் :**

- தான் மேற்கொண்ட செயலை செயலாக்கிட தொழில் முனைபவர் புலனாகக்கூடிய மற்றும் புலனாகாத உட்பொருட்களையும் ஒன்றிணைப்பவர் ஆவார்.
- தொழிலை துவக்கிட இடு பொருளை வாங்குதல், மனித வளத்தை திரட்டுதல், நிதியை புரட்டுதல், போன்ற நடவடிக்கைகளை நாட்டின் மூலை முடுக்குகளுக்கு சென்று சேரும் வகையில் பொருளை உற்பத்தி சந்தையிடுகைக்கு கொண்டு சேர்க்கும் செயலை செய்பவர் ஆவார்.

46. **(அ)** (i) **விலை உயர்வைத் தவித்தல் :** வணிக நிறுவனங்கள் தங்கள் வணிகத்தில் பொருட்களில் கடுமையான பற்றாக் குறை ஏற்படும் சூழலில் கூட பொருளுக்கான விலைகளை உயர்த்துவரை தவிர்க்க வேண்டும்.

(ii) **பதுக்கலை தவிர்த்தல் :** வணிக நிறுவனங்கள் தங்கள் வணிகத்தில் இயல்பான போக்கினை அனுமதிக்க வேண்டும். நுகர்வோர் பாதிக்கப்படும் வகையில் பதுக்கல் மற்றும் கள்ளச்சந்தை நடவடிக்கைகள் மூலம் அதிக இலாபம் ஈட்டும் நடவடிக்கைகள் தவிர்க்கப்படல் வேண்டும்.

(iii) **உயர் தரத்திற்கு உத்தரவாதம் அளித்தல்:** வணிக நிறுவனங்கள் தங்கள் உற்பத்திப் பொருட்களுக்கு பொய்யான உத்தரவாதங்களை அளிக்கக்கூடாது. அவைகள் தங்களது பொருட்களின் உயர் தரத்தினை உறுதிப்படுத்த வேண்டும்.

(iv) **பொருட்கள் குறித்த தகவல்கள் அளித்தல்:** வணிக நிறுவனங்கள் தங்களின் உற்பத்திப் பொருட்களின் தரம், அளவு மூலப்பொருட்கள் பயன்பாடு, பின் விளைவுகள், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், எடை, மாற்றிக் கொள்ளும் வசதி, பயன்படுத்தும் முறை ஆகியவை குறித்த மிகச்சரியான மற்றும் போதுமான தகவல்களை நுகர்வோருக்கு கட்டாயம் தரவேண்டும்.

(v) **விளம்பரங்களில் உண்மை (நேர்மை) :** வணிக நிறுவனங்கள் தங்களின் உற்பத்திப் பொருட்களுக்கு விளம்பரம் செய்யும் போது அவ்விளம்பரங்களில் பொய்யான, உண்மைக்குப் புறம்பான,மோசடியான தகவல்களை அளித்து நுகர்வோருக்கு தவறான வழிகாட்டக் கூடாது.

**(அல்லது)**

**(ஆ)** நிதிச் சந்தைகளை பல்வேறு வழிகளில் பிரிக்கலாம். அவை:

**(அ) நிதிக் கோருதல் வகையின் அடிப்படையில்:**

(i) **கடன் சந்தை :** கடன் கருவிகளை வர்த்தகம் செய்வதற்கான நிதிச் சந்தை கடன் சந்தை ஆகும். அரசு பத்திரங்கள் அல்லது பிணையங்கள், நிறும கடனீட்டு பத்திரங்கள் போன்றன.

(ii) **நேர்மை பங்குச் சந்தை :** நிறும நேர்மை பங்குகளின் வணிகத்திற்கான நிதிச் சந்தை நேர்மை பங்குச் சந்தை ஆகும்.

orders@surabooks.com Ph:9600175757 / 8124201000
Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com
www.surabooks.com



**(ஆ) நிதி கோருதல் முதிர்வு அடிப்படையில் :**

(i) **பணச் சந்தை :** குறுகிய கால, (ஓராண்டு அல்லது அதற்கு குறைவாக) நிதி கோருதலுக்கான நிதிச் சந்தை பணச்சந்த ஆகும். எ.கா. கருவூலச் சீட்டுகள், வணிகத் தாட்கள், வைப்புச் சான்றிதழ்கள் ஆகியன.

(ii) **மூலதனச் சந்தை :** நீண்ட கால (ஓராண்டுக்கு மேல்) நிதிகோருதலுக்கான சந்தை மூலதன சந்தை ஆகும். எ.கா. பங்குகள், கடனீட்டுப் பத்திரங்கள் போன்றவை.

**(இ) நிதி கோருதலின் வெளியீட்டுக் கால அடிப்படையில்:**

(i) **முதல் நிலைச் சந்தை :** முதன்முதலில் புதியதாக பத்திரங்களை வெளியிடும் சந்தை முதல் நிலைச் சந்தை எனப்படுகிறது. இதில் பணம் முதலீட்டாளர்களிடமிருந்து நேரடியாக நிறுமங்களுக்குச் செல்கிறது.

(ii) **இரண்டாம் நிலைச் சந்தை :** ஏற்கனவே வெளியீடு செய்யப்பட்ட பங்குகளுக்கான சந்தை இரண்டாம் நிலைச் சந்தை ஆகும்.

**(ஈ) நிதி கோருதலின் வழங்கலின் கால அடிப்படையில்:**

(i) **ரொக்கம் (அ) உடனடிச் சந்தை :** ஆவணங்களை வழங்கலும் ரொக்கம் பெறுதலும் உடனடியாக நடைபெறும் சந்தை உடனடிச் சந்தை ஆகும்.

(ii) **முன்னோக்கிய (அ) எதிர்காலச் சந்தை:** சொத்து வழங்கலும் ரொக்கம் செலுத்தலும் முன்னரே தீர்மானிக்கப்பட்டு எதிர்காலத்தில் நடைபெறும் சந்தை எதிர்கால சந்தை ஆகும்.

**(உ) நிதிச் சந்தை அமைப்பின் அடிப்படையில்:**

(i) **பரிமாற்றக வர்த்தகச் சந்தை :** ஒரே மாதிரியான ஒழுங்கு நடைமுறைகளை கொண்ட பங்கு மாற்றகம் பரிமாற்றக வர்த்தக சந்தை எனப்படுகிறது. இது ஒரு மையப்படுத்தப்பட்ட அமைப்பு.

(ii) **எதிர்ச் சந்தை :** வழக்கமான நடைமுறைகளைக் கொண்டு பங்கு மாற்றகத்தில் வெளியில் நடைபெறும் சந்தை எதிர்ச் சந்தை எனப்படுகிறது. இது ஒரு மையப்படுத்தப்படாத அமைப்பு.

47. **(அ) மின்சந்தைப்படுத்துதலின் நன்மைகள் :**

(i) **அனைத்து நேரத்திலும் சந்தை:** மின் சந்தை வாரத்தின் 7 நாட்களிலும் 24 மணி நேரத்திலும் (24 × 7) பயனாளிகளுக்கு சந்தை வசதியை அளிக்கிறது.

(ii) **நேரடி தொடர்பு:** தயாரிப்பாளருக்கும் நுகர்வோருக்கும் இடையே நேரடி ஏற்படுவதால் செலவுகள் குறைக்கப்படுகிறது. இதனால் மலிவான விலையில் பொருட்களை இணைய சந்தையிடுகையின் வாயிலாக நுகர்வோர்கள் வாங்க இயலுகிறது.

(iii) **தேவையை பெறுதல்:** நுகர்வோர் தங்களுக்கு தேவைப்படும் எத்தகைய பொருள்களையும் மற்றும் சேவைகளையும் மின் சந்தையில் பல்வேறு தளங்கள்/வலை பக்கங்கள் மூலம் பெறலாம்.

**மின்சந்தைப்படுத்துதலின் தீமைகள் :**

(i) **அதிக செலவு :** மின் சந்தைப்படுத்துதலில் விளம்பரம் செய்யவும், வணிக தளம் அமைக்கவும், பெரிய அளவில் செலவிட வேண்டும். வலைத்தள வடிவமைப்பு, மென்பொருள், நுண்பொருள் வணிகதளம் பராமரிப்பு, வினியோக செலவு போன்றவற்றிற்கு அதிக அளவில் முதலீடு செய்ய வேண்டியுள்ளது.

(ii) **சிறிய நிறுவனத்திற்கு பொருந்தாது:** மிக தொலைவில் உள்ள வாடிக்கையாளர்களுக்கு பொருள்/சேவைகளை வழங்க சிறிய நிறுவனங்களுக்கு மின் சந்தைப்படுத்தல் பொருந்தாது.

(iii) **தகவல்களை புதுப்பித்தல்:** இன்றைய சூழலில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்துக் கொண்டிருக்கிறது. இதற்கு ஏற்ப நிறுவனங்கள் இணைய தளத்தில் போதிய விவரங்களை புதுப்பிக்கின்றன.

(iv) **பாதுகாப்பு இல்லாமை:** பெரும்பாலும், நுகர்வோர் தங்களது கடன் அட்டையை பயன்படுத்தி மின் இணையம் மூலம் பொருட்களை/சேவையை பெற தயங்குகின்றனர்.

**(அல்லது)**

**(ஆ) நவீன மேலாண்மையின் கோட்பாடுகள்:** நவீன மேலாண்மையின் தந்தை எனப் போற்றப்படும் திரு.ஹென்றி போயல் ஒவ்வொரு மேலாளரும் நிறுவனத்தின் வெற்றிக்காக நடைமுறைப்படுத்த வேண்டிய 14 பிரதான கோட்பாடுகளை வரையறுத்திருக்கிறார். அவைகளாவன.

(i) **வேலைப் பகிர்வு :** இக்கோட்பாட்டின்படி தொழிலமைப்பின் மொத்தப்பணிச் சுமையும் சிறிய பணிகளாகப் பகிர்வு செய்ய வேண்டும். தொழிலாளர் ஒவ்வொரு தொழிலாளியின் திறமைக்கேற்ப பணி ஒதுக்கீடு செய்யப்பட்டு அப்பணியில் அத்தொழிலாளி சிறப்பீடுபாடும் நிபுணத்துவமும் அடையும் வண்ணம் தொழில் முறை வளர்ச்சியையும் பணிச்சூழலையும் உருவாக்க வேண்டும்.

(ii) **அதிகாரமும், பொறுப்பும்:** அதிகாரம் என்பது ஒரு அலுவலர் தன் கீழ்ப்பணியாளர்களுக்கு ஆணையிடும் உரிமையைக் குறிக்கின்றது.

(iii) **ஒழுங்குமுறை :** இது கீழ்ப்படிதல், மற்றவர்களிடம் முறைப்படி நடத்துதல், அதிகாரத்தை மதித்தல் போன்றவை ஆகும். இவ்வொழுங்கு நிறுவனம் செம்மையாக நடைபெற இன்றியமையாததாகும்.

(iv) **பொது நலனுக்காக தனி நலம் புறக்கணிக்கப்படல் வேண்டும்:** நிர்வாகம் தனிப்பட்ட ஆதாயங்களை ஒதுக்கி வைத்துவிட்டு நிறுவனத்தின் நோக்கங்களை மட்டுமே முன் நிறுத்த வேண்டும். எனவே தனிப்பட்ட நபர்களின் தனிநலனை விட தொழில் நிறுவனத்தின் நோக்கமே அனைத்தையும் விட மேம்பட்டிருக்க வேண்டும்.

(v) **ஊதியம் :** ஊதியம் என்பது பணியாளர்களின் பணிக்கு கொடுக்கப்படும் விலையாகும். பணியாளருக்கு கொடுக்கப்படும் ஊதியமே தொழிலாளர்களை ஊக்குவிக்கும் முதன்மையான ஊக்குவிப்பவனாக இருந்து உற்பத்தியை அதிகரிப்பதால் அவர்களுக்கு போதுமான ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

❁ ❁ ❁ ❁ ❁

orders@surabooks.com Ph:9600175757 / 8124201000
Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com